★ ராஜீவ் சூளுரை: அயல்நாடுகளில் ஆயுதங்களைக் குவிப்பதன் மூலம்

# எம்மை எவரும் பலவீனப்படுத்த முடியாது!

விலை ரூபா 1-25 REGISTERED AS A NEWSPAPER

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1 ஒலி 200 புதன் 17-06-1987 (ஆனி 3) ஷவ்வால் 19

(பூனா)

யாழ்ப்பாணத்துக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவது பற்றி இலங்கை அரசும் இந்திய அரசும் ஓர் உடன்பாடு கண்டுள்ளமையை தாம் வரவேற்பதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி



தெரிவித்தார். இந்திரா காங்கிரஸ்கட்சி கூட்டத்தில் பேசிய பிரதமர் இலங்கை இனப்பிரச்சினை இன்னமும் நட்புறவு அடிப்படையில் தீர்த்துவைத்துக் கொள்ளப் படக்கூடியதாக உள்ளது என்றார். தொடர்ந்து பேசிய அவர் எச்சந்தர்ப்ப சூழ்நிலையிலாவது பாரதம் பலவீனப்படுத்தப்பட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் எத்தகைய பாதகமான நிலை ஏற்பட்டாலும் இந்தியாவின் ஐக்கியம், ஒருமைப்பாடு,

—6 ஆம் பக்கம் பார்க்க

# வடமராட்சி தனி மாவட்டமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது

## "விடுதலை பெற்ற கல்விப் பிரதேசத்தின்" பணிப்பாளராக சுந்தரலிங்கம் நியமனம்

ஸ்ரீலங்கா ராணுவத்தின் தாக்குதலையடுத்து, நூற்றுக்கணக்கான மக்களின் உயிரிழப்பின் பின்னர், ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கும் வடமராட்சிப் பிரதேசம்; ராணுவ நிர்வாகத்துக்கு வாதியாக தனி மாவட்டமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இணைப்பதிகாரி அலுவலகம், பொலிஸ் சுப்பிரின்டன் அலுவலகம் ஆகியன இவ்வாரம் முதல் இயங்க ஆரம்பித்துள்ளன. பிரதம தபால் அலுவலகமொன்றும் இங்கு திறக்கப்படவுள்ளது.

அதேவேளையில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுடன் வடமராட்சிப் பகுதியும் இணைக்கப்பட்டு "விடுதலை பெற்ற கல்விப் பிரதேசமாக" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. இ. சுந்தரலிங்கம், வடமராட்சியும் இணைக்கப்பட்ட "விடுதலை பெற்ற கல்விப் பிரதேசத்தின்" கல்விப் பணிப்பாளராக கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றார். இவர் வடமராட்சிக்கு விஜயம் செய்து இப் பதவியை ஏற்றதாகத் தெரியவந்துள்ளது.

தேபோல கிளிநொச்சியுடன் வடமராட்சியையும் இணைத்து "விடுதலை பெற்ற நிர்வாகப் பிரதேசமாக" பிரகடனம் செய்ய ராணுவ உயர்

—6 ஆம் பக்கம் பார்க்க

## 43 படகுகளில் தமிழ் அகதிகள் ராமேஸ்வரம் சென்றுள்ளனர்

(சென்னை)

கடந்த ஒருவாரத்துக்குள் மொத்தம் நாற்பத்து மூன்று வள்ளங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வந்துள்ளவர்களின் உத்தியோகபூர்வமான எண்ணிக்கை சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமாகியிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மாணவ, மாணவிகள் உட்பட, நூற்றுக்கணக்கான உயர்தர மாணவர்களும் அகதிகளாக ராமேஸ்வரம் வந்துள்ளனர்.

—6 ஆம் பக்கம் பார்க்க

## சிங்கள உளவாளி கைது!

இராமேஸ்வரத்தில் உள்ள இலங்கை தமிழ்அகதிகள் முகாமுள் நுழையமுற்பட்ட சிங்களவர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமரநாயக்கா என்னும் இந்தச் சிங்களவரை அகதி முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அடையாளம்கண்டு கொண்டதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டார். உளவாளி எனச் சந்தேகிக்கப்படும் இவர் தற்போது விசாரிக்கப் பட்டுவருகின்றார்.

## இரண்டு அதிரடிப்படையினர் கிரான் கண்ணிவெடிக்கு பலி

கிரான் பகுதியில் போராளிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி ஒன்று நேற்று வெடித்ததில் இரண்டு பொலிஸ் அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதுடன் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அதிரடிப்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் நவரட்ண, விஜிதசிறி ஆகியோரே கொல்லப்பட்டதாகவும் அறிவித்துள்ள அரசாங்கம், தவறுதலாகவே இக் கண்ணிவெடி வெடித்ததாகவும் அறிவித்துள்ளது.

பன்னச்சேனை என்ற இடத்

—6 ஆம் பக்கம் பார்க்க

## பாகிஸ்தானிடம் இராணுவ உதவிபெற லலித் முயற்சி!

(ரவால்பிண்டி)

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் பிரதமர் முகமட்கான் ஜுனைஜோவையும் சந்தித்துப் பேசினார்.

இலங்கையின் தற்போதைய

—6 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்புத்துறை வீட்டில் துணிகர நகைக்கொள்ளை

(கொழும்புத்துறை)

தந்தை வீட்டிலில்லாத நேரம் இரவில் பெண்பிள்ளைகளைக் கத்தி முனையில் மிரட்டிக் கொழும்புத்துறை கிழக்கில் துணிகரக் கொள்ளை இடம் பெற்றுள்ளது. வேலுப்பிள்ளை மாரியப்பிள்ளை என்பவரின் வீட்டிலேயே கொள்ளையர் தமது கை வரிசையைக் காட்டியுள்ளனர்.

12 பவுண் பெறுமதியான தங்கச்சங்கிலிகள், மோதிரம்,

—6 ஆம் பக்கம் பார்க்க

# நட்வர்சிங்கின் நேரடியான கவனிப்பில் உணவுப் பொதிகள் படகில் ஏற்றப்படும்



(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அதித அக்கறை காட்டிவரும் இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் திரு. கே. நட்வர் சிங் இந்திய அரசின் பிரதிநிதியாக இராமேஸ்வரத்துக்கு அனுப்பப்படுவாரென்றும், அவரது நேரடிக் கண்காணிப்பிலேயே யாழ்ப்பாண மக்களுக்கான உணவுப் பொருட்கள் படகுகளில் ஏற்றப்படுமென்றும் தமிழக அரசுக்குத் தகவல் தரப்பட்டுள்ளது. முதல்வர் எம். ஜி இராமச்சந்திரனுடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் நட்வர்சிங் இவ்வாரம் சென்னைவர, முன்னரே ஏற்பாடாகியிருந்தது. இம் மாதம் இரண்டாம் திகதி கச்சதீவுவரை வந்து திரும்பிய இந்தியப் படகுகளுக்கு இந்திய அரசின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக வந்த திரு. மைத்ரேயே இம்முறையும் காங்கேசன்துறை வரும் உணவுப் படகுகளுக்கும் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அநேகமாக இந்த உணவுப் படகுகள் நாளை காங்கேசன்துறை நோக்கிப் புறப்படலாம் என தெரிய

—6 ஆம் பக்கம் பார்க்க

சித்திரச் சிறுவிளம்பரம்


**THANKS**

Grateful Thanks to Almighty God Sacred Heart of Jesus and St Jude for favours granted. M, K 0603

**விற்பனைக்கு**

கதவு நிலைகள் (முதிரை) 5'' அரிகல் ஆ என்பன. தொடர்பு K. ராமலிங்கம், 111/2 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 06035


முகாமிட்ட இராணுவத்தால்

# அச்சுவேலியில் வைத்திய உபகரணங்கள் கொள்ளை!

(அச்சுவேலி)

அச்சுவேலியில் மிக நவீன வசதிகளுடன் கூடிய தனியார் வைத்தியசாலையாகிய தங்கம் வைத்திய சாலையில் இருந்து நவீன வைத்தியக் கருவிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இராணுவம் அச்சுவேலியை விட்டு வெளியேறியவுடனேயே வைத்தியசாலைக்கு விரைந்த உரிமையாளர் அங்கு சென்றபோது நவீன வைத்திய சாதனங்கள் எடுத்துச் செல்லப்பட்டதனைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

வெளிநாட்டிலிருந்து அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட கருவிகள் உட்பட சுமார் ஒன்பது இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எவ்விதத்திலும் பொது மக்களால் பாவிக்க முடியாததும், அவர்களுக்குத் தேவையற்றதுமான இப்பொருள்கள் இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

எடுத்துச் செல்லப்பட்ட கருவிகளில் இருதய நோய் சம்பந்தப்பட்ட கருவிகளே முக்கியமானவை எனக் கூறப்படுகின்றது.

அத்துடன் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் இருந்தும் பலபொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

## நவக்கிரக மண்டபம்

(பண்டத்தரிப்பு)

ஐம்பதினாயிரம் ரூபா செலவில் அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோவிலில் நவக்கிரக மண்டபம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

வெளிநாடுகளில் தொழில் புரியும் வாலிபர்கள் இதற்கான செலவை ஏற்றுள்ளனர்.

## பதவி உயர்வு

யாழ்ப்பாண மாநகரசபையில் தமிழ் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றுபவரும், உள்ளூராட்சிச் சேவை தமிழ், ஆங்கில சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் சங்கஸ்தாபகர்களில் ஒருவரும் அதன் தற்போதைய செயலாளருமாகிய திரு இரா. இரத்தினசிங்கம் உள்ளூராட்சி தட்டெழுத்தாளர் சேவையின் 1-ம் தரத்திற்கு, உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களத்தினால் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

உள்ளூராட்சி தட்டெழுத்தாளர் சேவையைப் பொறுத்தவரையில் 1-ம் தர தமிழ் தட்டெழுத்தாளர் பதவியுயர்வினை முதன் முதலில் பெற்ற பெருமையும் இவருக்கேயுரியது.

# காலியிலுள்ள தடுப்புமுகாம் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது

காலித்துறைமுகத்தில் உள்ள களஞ்சிய அறை தடுப்பு முகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த முகாமில் புதிதாக பொலிஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளதுடன், புதிய கட்டடங்களும் அவசர அவசரமாக கட்டப்பட்டு வருகின்றன. இந்த முகாமைச் சுற்றி அதி உயரமான கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி தேடுதலின் போது கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தற்போது இந்த முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் கூடுதலானவர்களை தடுத்து வைக்கக் கூடியதாகவே இந்தமுகாம் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

# சட்டவிரோத மின் பாவனை பண்டத்தரிப்பில் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பில் சட்டவிரோத மின்னிணைப்பு அதிகரித்து வருவதால் பத்தாயிரம் அலகு மின்சாரம் வீணாகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் இப்பகுதி மின் பாவனையாளர்கள் பாதிக்கப்படுவதுடன் அபிவிருத்திச் சபை அலுவலகத்துக்கும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் தேவைப்படுவோர் விண்ணப்பம்செய்தால் அதற்கு துரிதகதியில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்பு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ஏ. சி. இராசதுரை தெரிவித்துள்ளார்.

பண்டத்தரிப்பு நகரில் ஒரு நாள் மட்டும் 28 கிலோ நிறையுள்ள மோட்டார்களுக்கு இணைக்கப்பட்ட மின்சார வயர்கள் துண்டிக்கப்பட்டதாகவும், பலர் எச்சரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பித்தவர்களுக்கு பொருத்துவதற்கு புதிய மின் மீற்றர்கள் தருவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

## ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)

கடந்த ஏழுவருட காலமாக யாழ் சுகாதார திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. பொ. இராசேந்திரம் கடந்த 28ஆம் திகதி தமது 39 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

## கலைவாணி சனசமூக நிலையம்

(திருநெல்வேலி)

கொக்குவில்மேற்கில் பூநாறி வீதியில் கலைவாணி சனசமூக நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டது.

அதன் நிர்வாகிகள் பின்வருமாறு :-

காப்பாளர்கள் : தொழில் அதிபர் திரு. க. சனகராசா, திரு. நா. சோமசுந்தரம், தலைவர்: திரு சி வீரசிங்கம், உபதலைவர்: திரு சி. சிவராசா, செயலாளர்: திரு. எஸ். கே. யோகநாதன், உபசெயலாளர்: திரு. கு. சரவணமுத்து, பொருளாளர்: திரு கு கோபாலகிருஷ்ணன், உபபொருளாளர்: திரு. க. முத்துராசா. ஒன்பது பேர் கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் தெரியப்பட்டது.

## எரிகிற வீட்டில் இப்படி வேலை

(கொக்குவில்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தோன்றியுள்ள இராணுவ நடவடிக்கை சூழ்நிலை காரணமாக சொந்த ஊர்களை விட்டு பாரதத்துக்கு தஞ்சம் புக அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களிடம் தமது கைவரிசைகளைக் காட்ட இப்போது சிலர் முனைந்து கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

பிரயாணச் செலவுக்கான அட்வான்ஸ் வாங்கி ஏமாற்றுவது கூடுதலான கட்டணம் அறவிடுவது உட்பட வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லும்போது செய்யப்படும் ஏஜன்சி மோசடி வேலைகளையும் இந்த 'எரிகிற வீட்டில் எஞ்சிய மிச்சம்' என்ற நோக்கம் கொண்டிருக்கும் சந்தர்ப்பவாதிகள் செய்து வருவதாகத் தெரியவருகிறது.

அப்பாவி மக்கள் சிலர் இதன்போது ஏமாற்றப்பட்டு விட்டதாகவும் அறியப்படுகிறது.


Bata

பாட்டா பிரியர்களுக்கு

ஓர் நற்செய்தி!

யாழ். நவீன சந்தையிலிருந்த அங்கீகாரம் பெற்ற பாட்டா விற்பனை நிலையம்

தற்போது நாட்டில் நடைபெறும் நிலைமை காரணமாக மக்களின் பாதுகாப்புகருதி



7-வது ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 6 - 3 - 1930

ஆண்டவன் அழைப்பில்: 17 - 6 - 1980

யோசேப்பு பரங்கியம்மா

(செல்லக்கண்டு)

அன்பின் திருவுருவான எம் தாயே! குடும்பத்தின் குலவிளக்காய், குலதெய்வமாய் திகழ்ந்த அன்னையே எங்களைவிட்டு பிரிந்து ஏழு ஆண்டுகள் சென்றாலும் தங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

தாய், கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாவாந்துறை.

06030



உடனடி பிரயாண ஒழுங்குகள்

NAVAL BASE PROJECT

SAUDI ARABIA

| | |
|---|---|
| Mech Engineers | — 5 |
| Electrical Engineers | — 2 |
| Power Plant Electricians | — 10 |
| Power Plant Operators | — 20 |
| Power Plant Mechanics | — 10 |
| Telephone Operators | — 3 |
| Labourers | — 100 |

7 நாட்களுள் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

K. லிங்கம்

காளுவன் சந்தி — சுழிபுரம்.

06037

நல்வாக்கு

எப்போதும் பிறரைக் குறைகூறவேண்டாம். ஆகவேண்டியவற்றைக் கடைப்பிடி. அத்துடன் நின்றுவிடு.

—சுவாமி விவேகானந்தர்

ஆர். ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008


# இதயநாதம்

## இது இரண்டாவது வெற்றி!

யாழ்ப்பாண மக்களுக்கு இந்தியா வழங்கும் நிவாரணப் பணிகளை ஏற்றுக்கொள்வதென்றும், இப்பொருட்களை நேரடியாக இந்தியாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு எடுத்துச் செல்ல அனுமதிப்பதென்றும் இலங்கை அரசு எடுத்திருக்கும் முடிவை, புத்திசாலித்தனமான நல்லதொரு முடிவு என்னும் வகையில் நாம் வரவேற்கின்றோம்.

இம்மாதம் இரண்டாம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து உணவுப்பொருட்களுடன் இந்தியப் படகுகள் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது, அவைகளை உள்ளேவர இலங்கைக் கடற்படை அனுமதி வழங்கவில்லை.

சுமார் ஐந்து மணிநேரம்வரை கச்சதீவுக் கடற்கரை எல்லையில் தரித்து நின்ற பின்னர் அவை இராமேஸ்வரத்திற்கே திரும்பிச் சென்றன.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி அப்போது இப்பகுதியில் நாம் குறிப்பிடுகையில் ''இந்தியாவின் ராஜதந்திரத்துக்குக் கிடைத்த முதல் வெற்றி'' என்று குறிப்பிட்டிருந்தோம்.

இம்மாதம் நான்காம் திகதி ஒரு தொகுதி உணவுப் பொருட்களை விமானங்கள்மூலம் கொண்டுவந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியதன்மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னால் எதனையும் செய்ய முடியுமென்பதையும் இந்தியா செயலில் நிரூபித்தது.

இந்தச் செயலை இலங்கை அரசும், அதற்கு ராணுவ, ஆயுத உதவிகளை வழங்கிவரும் சில நாடுகளின் இரண்டாம், மூன்றாம் தர அதிகாரிகளும் கண்டித்தனராயினும், இந்தியாவின் மனிதநேய நடவடிக்கையை நிறுத்துமாறு எவரும் வற்புறுத்தவில்லை என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள்சபை, காமன்வெல்த் நாடுகள் அமைப்பு, சார்க் மாநாடு ஆகியவைகளில் எடுக்கப்போவதாக இலங்கை பயமுறுத்தியதாயினும், அவைகள் எதிர்பார்த்த அளவு வெற்றியை அளிக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்சினையில் தலையிட மறுத்துவிட்டது.

நாளை ஆரம்பமாகும் 'சார்க்' வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றி எதுவுமே கதைக்கமுடியாது என்று இந்தியா எச்சரித்துள்ளது.

அதேவேளையில், இருபத்தைந்து தொன் உணவுப் பொருட்களை இருபது நிமிடங்களில் வானத்திலிருந்து வீசியதன் மூலம் பணி முடிந்துவிட்டதென்று இந்தியா இருந்துவிடவில்லை.

இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்தியன் போஸ்ட், இந்து ஆகிய பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகள், இலங்கையிடம் மீண்டும் ஏமாறாமல் இருக்க இந்தியா எடுத்துவரும் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தெரியவைக்கின்றது.

அவசியமேற்படும் பட்சத்தில் 'ஒப்பறேஷன் லிபறேஷன்' நடவடிக்கையை இந்தியாவும் ஆரம்பிக்கலாம்போலத் தோன்றுகின்றது.

''யாழ்ப்பாணத்தின்மீதான தாக்குதல்கள் முடிவடைந்துவிட்டன'' என்று கூறும் அமைச்சர் அத்துலத்முதலியின் திடீர் பாகிஸ்தான் விஜயமும், இவ்வாரம் மேற்கொள்ளவிருக்கும் அமெரிக்க பயணமும் கூறாமல் கூறும் ரகசியம் என்ன?

இதனைப் புரிந்துகொண்ட இந்தியா விழித்துக்கொண்டுள்ளது என்பதை, தென்னிந்தியப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படும் முப்படைகளின் பலப்படுத்தல் நடவடிக்கை புரியவைக்கின்றது.

அதேவேளை, யாழ்ப்பாண மக்களுக்குத் தொடர்ந்தும் உணவுப் பொருட்களை வழங்க இம்முறை இலங்கை அனுமதி வழங்கிவிட்டது.

யாழ்ப்பாணம், இலங்கை, இந்திய செஞ்சிலுவைச் சங்கங்களின் பிரதிநிதிகள், இந்திய அரசு, இந்தியத்தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் தலைமையில் காங்கேசன்துறை சென்று இப்பொருட்களைப் பொறுப்பேற்று மக்களுக்கு விநியோகிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தியப் படகுகளை இம்மாதம் இரண்டாம் திகதி தடுத்து மறித்துத் திருப்பி அனுப்பிய இலங்கைக் கடற்படை, இம்முறை கடலில் எதிர்கொண்டு அழைத்துவருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், இப்பொருட்களைப் பொறுப்பேற்கச் செல்லும் அரசாங்க அதிபர் தலைமையிலான குழு மீது இலங்கை ராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யாமல் இருக்கவும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

அண்மைய நாட்களில் உணவுப் பொருள் ஏற்றச் சென்ற உள்ளூர் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் ராணுவத்தால் ஏற்பட்ட அபாயத்தை நாம் மறந்துவிட முடியாது.

முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணஐயர், கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம், சோவியத் தூதரக அதிகாரி கிறிஸ்லிங்கோவ் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொண்ட கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

# இந்தியாவின் ராணுவரீதியான சகல நடவடிக்கைகளுக்கும் தமிழ்நாடு ஆதரவு வழங்கும்!

இந்திய விமானப் படை அண்மையில் யாழ். குடாநாட்டின் மீது நிவாரணப் பொருட்களைச் சொரிந்து வழங்கியமை யாபேரும் அறிந்ததே. அது சர்வதேசச் சட்டத்தை மீறுவதாகாது. மாறாக அச்செய்கை மிக மிக நீதி நியாயமானதே என்று கருத்து வெளியிட்டார் பாரத சுப்ரீம் நீதிமன்றத்தின் முன்னைநாள் நீதியரசர், திரு. வி. ஆர் கிருஷ்ண ஐயர். ''நூற்றுக் கணக்கான மக்கள் பசி, பட்டினியால் இறந்து கொண்டு இருக்கும்போது, எந்த நாடாவது இப்படி அவசரமாக நிவாரணம் வழங்குவதை எவ்வாறு நியாயமற்றது எனலாம்?'' என அவர் வினாத் தொடுத்தார்.

இந் நிவாரணப் பணியை மேற்கொண்டு நிறைவேற்றுதற்கு, அனைத்துலக இன்னலுறும் மக்கள்மீதும் இரக்கம், பரிவு என்பவற்றின் சின்னமாக விளங்கும் தெரேஸா அம்மையாரை அனுப்பி இந் நற் கைங்கரியத்தை ஆற்றுவித்து இருக்கலாம். அப்பேர்ப்பட்ட ஒரு மனிதாபிமானத் தூதுக்கு ஆட்சேபனை தெரிவிக்க எந்தத் தேசமாவது துணிந்திராது என்றார் மதிப்பிற்குரிய இம்முன்னைநாள் நீதியரசர்.

சென்னையில் தேசிய ஒருமைப்பாட்டிணைப் பிற்கென வுள்ள அரங்கு நிகழ்த்திய ''சர்வதேச நிலைபரக்குலைப்புச் சக்திகளும் இந்து சமுத்திரமும்'' எனும் விடயத்தின்மீது உரையாற்றுகையிலேயே திரு. கிருஷ்ணஐயர் இங்ஙனம் தெரிவித்தார்.

''இலங்கையில், பாதுகாப்பு எதுவுமற்ற தமிழர்களை விவரிக்க ஒண்ணாத வகையில், பூண்டோடு அழித்து வரும் இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன நான்கு ஆண்டுகளாக பாரதப் பிரதமருக்கு 'வண்டில்' விட்டுவந்துள்ளார். இவ்வளவு நீண்ட காலத்தின் பின்னர், திடீரெனக் கண்விழித்துள்ள திரு. ராஜீவ் காந்தி இப்போது தான் அதனை உணரத்தலைப்பட்டுள்ளார்'' என வருத்தம் தெரிவித்தார்.

'இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது இலட்சோப இலட்சம் யூத இன மக்களைத் திட்டமிட்டு அழித்த ஜேர்மன் சர்வாதிகாரி, அடோல்ப் ஹிட்லரைக் கூட திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன விஞ்சிவிட்டார். இலங்கைத் தீவில், அரசினாலேயே புரியப்படும் பயங்கரவாதம், தமிழர் மீது புரியப்படும் மனித இனக்கொலை என்பனவற்றைப் பற்றிய பூரண விபரங்களை உலகறிய எடுத்துச் சொல்ல இந்தியா தவறியிருந்தது ஏனோ எனக்குத் தெரியவில்லை.' இவ்வண்ணம் இயம்பிக் கிலேசமுற்ற முன்னைநாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி, பாரத வாலாற்றிலிருந்து பின்வரும் திருஷ்டாந்தம் ஒன்றையும் எடுத்துக் காட்டினார்:

''பாகிஸ்தான், அந்நாட்டில் கிழக்குப் பாகிஸ்தான் என வழங்கிய பிரதேச மக்களைப் பரிநாசம் செய்ய முயன்று கொண்டு இருந்தவேளை [illegible] பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, தற்போது இலங்கைத் தீவில் நிலவுவதை நிகர்த்த அந்நிலைமையை எப்படியாக எதிர்கொண்டார்? முதலில் உலக அபிப்பிராயத்தை அவர் முன்னுடியே தக்கவாறு உண்மை விபரம் அறியத்தந்து, சித்தப்படுத்தி வைத்திருந்தார். கிழக்குப் பாகிஸ்தான் விடயத்தில் இந்தியாவின் இராணுவத் தலையீட்டை ஆணையிட முந்தியே அவர் இங்ஙனம் சாவதானமாகச் செயலாற்றியிருந்தார்'' என்றார் திரு. கிருஷ்ண ஐயர்.

''மனிதத் தன்மையற்ற அட்டூழியங்கள் இலங்கைத் தீவில் அந்த அரசாங்கத்தினால் இழைக்கப்பட்டு வருகின்றன. அவ்விபரங்களை உலகளாவப் பரந்து கிடக்கும் தேசங்கள் அறியச்செய்தல் வேண்டும். பாரத நாட்டின் உச்ச வல்லமை படைத்த தலைவர்களை இத்தேசங்களுக்கு அனுப்பி வைத்து இவ்வாறு கருமம் ஆற்ற இன்னமும் காலம் கடந்து விடவில்லை. இத்தகைய தலைவர்களைத் தெரிந்தெடுத்தலில் கட்சி விசுவாச பேதங்கள் பொருட்படுத்தப்படலாகாது.'' திரு. கிருஷ்ண ஐயர் இவ்வண்ணம் தொடர்ந்தும் ஆலோசனை வழங்கினார்.

''இலங்கையின் மனித இனச்சிக்கல் தற்போது ஒரு நெருக்கடிக் கட்டத்தை அடைந்து நிற்கிறது. நிலைமைகள் இப்படியே தம்பாட்டுக்கு மோசமடைய விடப்பட்டு இருத்தலாகாது. அதனை விடுதது, அமைச்சரவையின் அமைச்சர் ஒருவரை அதற்கென முன்னரேயே நியமித்து, இலங்கை அரசாங்கத்தோடு இடையீடு அற்ற தொடரான அடிப்படையில் கலந்துரையாடல் நிகழ்வைத்திருக்கலாம். இந்தியப் பிரதம அமைச்சர், திரு. ராஜீவ் காந்தி அப்படிச் செய்வதை என்னதான் தடுத்து நின்றதோ யான் அறியேன்.

பல்வேறு வழிகளில் இந்தியாவின் நிலைபேறுள தன்மையைச் சீர்குலைக்க அமெரிக்கா எத்தனித்து வந்துள்ளது. இப்படியாக நாடுகளைச் சீர்குலைக்கும் கலையை ''சி. ஐ. ஏ.'' வாயிலாக நவீன ஏகாதிபத்திய வாதிகள் பரிபூரணமாக்கியிருந்தனர். உலகில் எவரைக் கொல்ல வேணுமானாலும் ''சி. ஐ. ஏ.'' ''யினால் அதனைச் சாதித்து முடிக்க இயலும். பாரதத்தின் சுதந்திரமான நிலைப்பாடு, அதன் அணிசாராமை, தன்நிறைவு முதலாயின அமெரிக்காவுக்கு 'அலேர்ஜி' ஊட்டுகின்றன'' இவ்வாறு இந்தியாவின்பால் அமெரிக்கா நடந்துகொள்ளும் விதத்தை திரு கிருஷ்ணஐயர் விளக்கினார்.

இஸ்ரேல் பற்றிக் குறிப்பிட்ட முன்னைநாள் சுப்ரீம் நீதிமன்ற நீதியரசர் கிருஷ்ண ஐயர், ''அனைத்துலகப் பயங்கரவாதி இஸ்ரேல், இலங்கையில் காலூன்ற முயல்கிறது. அவ்வாறு கால் ஊன்றி, இந்திய பாதுகாப்பினைப் பயமுறுத்துவது அதன் எண்ணம். அத்தகைய தீய சக்திகளுக்கு இடமளிப்பது பொல்லாங்குவிளைக்கும் என்பதை நாம் இலங்கை அரசாங்கம் புரிந்துகொள்ள வைத்தல் வேண்டும்.'' என எச்சரித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் இம்மாநாட்டில் உரையாற்றுகையில், பாரத அரசை விளித்து, பின்வரும் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்: ''இந்திய அரசு விரைந்து தலையிட்டு, இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்துநிறுத்த வேண்டும். இக்கணமே பாரதம் செயலில் இறங்கா விட்டால், எப்போதுதான் அது உதவப்போகிறதோ? இந்நெருக்கடியான தறுவாயில், தமிழ்நாட்டு மக்கள் இலங்கைத் தீவில் அல்லலுறும் தமது உடன்பிறப்புக்களின் சார்பில் குரல் எழுப்பி உதவ முன்வருதல் அவர்களது கட்டுப்பாடு ஆகும்'' என்றார் திரு. அ. அமிர்தலிங்கம்.

''திரு. ராஜீவ் காந்தி இலங்கைத் தீவின்பால் பாராட்டும் அன்பையும் நல்லெண்ணத்தையும் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தகாதவாறு பயன்படுத்தியுள்ளார். கடந்த நாலாண்டு காலத்தினுள் இலங்கைத் தீவின் இராணுவ பலம் நாற்பது மடங்கு அதிகரித்துக் கொண்டுள்ளது. முன்பு இருந்ததைவிட அத்தீவின் பாதுகாப்புச் செலவு நானூறு மடங்கு ஓங்கியுள்ளது. இங்ஙனம் அவர் நடந்து கொண்டுள்ள தருணத்தில், இந்திய தலையீட்டின் நலந் தீங்குகளைப் பகுப்பாய்வு செய்து, தத்துவஞான சிந்தனைகளில் மூழ்கியிருக்க இது நேரமல்ல.'' இவ்வாறு புள்ளிவிபரங்கள் சகிதம் இந்தியாவின் மாட்டு இலங்கை அனுசரித்து வரும் கொள்கையை எடுத்து முன்வைத்த கூட்டணிச் செயலதிபர், மேலும் அதனை உறுதிப்படுத்தி உரையாற்றியது வருமாறு: ''பாகிஸ்தானை ஆட்சிபுரிந்த திக்கா கான், கிழக்கு பாக். மக்களை முற்றாகத் துவம்சம் செய்ய முனைந்தார். அதனை எதிர்த்துத் தற்காத்துக் கொள்ள முற்பட்ட கிழக்குப் பாகிஸ்தானியர் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டனர். பாக். விமானக் குண்டுவீச்சில் அவர்கள் இறந்தனர். இவ் விமானங்களுக்கு மீண்டும் எரிபொருள் வழங்க முன்வந்து இக் கொலைகளுக்குத் தூபமிட்டது இலங்கையே.

இலங்கையின் ''உள்நாட்டுப் பிரச்சினையில் எந்த வெளிநாட்டுத் தலையீட்டுக்கும் சட்டபூர்வமான உரிமை கிடையாது என எழுப்பப்பட்ட வாதத்தை, திரு. அ. அமிர்தலிங்கம் பலமாகச் சாடினார்: ''அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக, இலங்கை அரசு எத்தனை நாடுகளிடம் ஆள், ஆயுத உதவி கேட்டுப் பெற்றுக் கொண்டிருக்கிறது! இஸ்ரேல், தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், சீன மக்கள் குடியரசு, இங்கிலாந்து முதலாம் நாடுகளின் கூலிப் படைகள் இலங்கை பக்கம் கும்பலாக அணி திரண்டு உள்ளன. இப் பின்னணியில் இலங்கையின் ''உள்ளூர்ப் பிரச்சினை'' எங்கே? வெளிநாட்டுத் தலையீடு எங்கே?'' எனத் திரு. அமிர்தலிங்கம் தர்க்க பூர்வமாகக் கேள்விக் கணைதொடுத்தார்.

—5ஆம் பக்கம் பார்க்க

# வடமராட்சியில் 35,000 மக்கள்

# அகதிகளாகி அவதி நிலையில்!

வடமராட்சியில் கடந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமான இராணுவத்தின் ''லிபரேஷன் ஒபபரேஷன்'' நடவடிக்கையின் கோர விளைவுகளின் பயனாக வடமராட்சிப் பகுதியிலிருந்து 35.000க்கும் அதிகமானோர் சொந்த வீடு, உடைமைகளையும் கைவிட்டு அகதிகளாக வேறிடங்களுக்குப் பாதுகாப்பைத் தேடிச் சென்று விட்டனர். வல்வெட்டித்துறை நசரம் முற்றாகவே வெறிச்சோடி விட்டது. வடமராட்சிப் பகுதியில் கடும் தேடுதல் நடவடிக்கைகளுக்கு உள்ளான வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, நவிண்டில், திக்கம், கொற்றாவத்தை, அல்வாய். நெல்லியடி, நாவலடி, வியாபாரிமூலைப் பகுதிகளில் வீடுகளிலும், வீதிகளிலும் இளைஞர்களையும், சிறுவர்களையும் காணுவது அரிதாகவே உள்ளது.

பொம்பர் குண்டுவீச்சு, ஹெலித்தாக்குதல், மோட்டார் ஷெல் சூட்டுக்குப் பலியானோரின் விபரங்கள் கிராம ரீதியாகத் திரட்டப்பட்டு வருகின்றன நூற்றுக்கணக்கான சடலங்கள் வீட்டு வளவுகளிலேயே புதைக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் 'அனாதையான' இறுதிப் பயணம் நிகழ்ந்து உள்ளது. ஊரடங்குச்சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்ததால் வடமராட்சிப் பகுதயில் சடலங்களைக் கூட வெளியே எடுத்துச் செல்ல முடியாத பரிதாப நிலையில் இழப்பு வீட்டுக்காரர்கள் அவலமுற்றிருந்தனர். சில வீடுகளில் சடலங்களை அப்படியே விட்டுவிட்டு வீட்டுக்காரர்கள் உயிர் தப்புவதற்காகப் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிவிட்டனர்

இதுவரையும் சுமார் 800-1000 வரையில் உயிர் இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கபபடுகிறது. வடமராட்சி தெற்கு-மேற்கு, வடமராட்சி வடக்கு-கிழக்கு உதவி அரச அதிபர்கள் உயிரிழந்தோரின் விபரங்களைத் திரட்டி வருகின்றனர். வீடழிப்பு, உயிர் பறிப்புக்கள் போன்ற பல அழிவுகளுக்கும் உள்ளான வடமராட்சிப பகுதியில் உள்ள மக்கள் இன்னும் பீதி நீங்காத நிலையில் மரண பயத்துடன்தான் காணபபடுகின்றனர்.

மரக்கறி, உணவுப் பொருட்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாகவே உள்ளது. கடற்றொழிலாளர்களின நிலை மிகவும் பரிதாபகரமானது கடலில் மீன் பிடிக்கச் செல்ல முடியாத சூழ்நிலையில் கடற்றொழிலாளர் குடும்பங்கள் உணவுக் கேவழியின்றியும். இருப்பிடங்களை விட்டு அகதிகளாக வெளியேறியும் அவல நிலைக்கு ஆளாகியுள்ளனர். தற்போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலவசமாக மாவு விநியோகம் செய்யப்பட்டுவருகின்றது. வழங்கப்படும் 2 கிலோ மா எத்தனைவேளை வயிற்றை நிரப்பப் போதும் என்று காய்ந்த வயிறுகள் ஓலமிடுகின்றன.

12 வயதுச் சிறுவர்களிலிருந்து 45 வயதானவர்கள் கூட இராணுவத்தினரினால் பிடித்துச் செல்லப்பட்டனர். இவர்களில் 5,6 பிள்ளைகளின் தந்தைகளும் அடங்குகின்றனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மினி இராணுவ முகாமில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவர்களில் சுமார் நூறு சிறுவர்களும், இளைஞர்களும் கடந்த புதன்கிழமை காலை நெல்லியடி பஸ் நிலையத்திற்கருகில் இராணுவ வாகனங்களில் கொண்டுவரப்பட்டு இறக்கிவிடப்பட்டனர். இவர்கள் சாரம், வேட்டி ஆகியவற்றுடனேயே காணப்பட்டனர். ஒன்றிரண்டு பேர் மட்டுமே ஷேட் அணிந்திருந்தனர்.

பலநூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது குடும்பத்தலைவர்களையும், தாய் - தந்தையரையும், பிள்ளைகளையும், சகோதரர்களையும் இழந்து தவித்து இன்னலுறும் வேளையில் கூடத் தமது கைவரிசைகளைக் காட்டும் சமூகத் துரோகிகளுக்கும் குறைவில்லை என்று கவலை தெரிவிக்கப்பட்டது. ஷெல் தாக்குதல், சூடுகளுக்குப் பலியான பெண்களின் உடல்களில் அணிந்திருந்த நகைகள், காதுத்தோடு, வளையங்கள் கூட அச்சடலங்கள் அநாதரவாகக் கிடந்தவேளையில் சூறையாடப்பட்டுள்ளன அகதிகளாக வெளியேறியுள்ளவர்களின் வீடுகளிலும் 'கன்னம்' வைக்கும் கோஷ்டியினர் தமது கைவரிசைகளைக் காட்டிவருகின்றனர். பல பெறுமதி மிக்க பொருட்கள் ஆட்கள் இல்லாத வீடுகளிலிருந்து திருட்டுப் போயுள்ளன.

திக்கம், கரணவாய்ப் பகுதிகளில் கொள்ளைக்கும்பலின் தொல்லை அதிகரித்து வருவதாகப் புகார் செய்யப்படுகின்றது. முகமூடி அணிந்த கொள்ளையர் வாள், கத்தி போன்ற ஆயுதங்களைக்காட்டி வீடுகளில் புகுந்து மிரட்டிக் கொள்ளையடித்து வருகின்றனராம். இரவு வேளையில் வெடிகளைக் கொளுத்தி அவை வெடித்ததும் துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் என்று நினைத்துப் பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியே பாதுகாப்புத்தேடி ஓடியதும் கொள்ளையர்கள் வெகு கச்சிதமாக வீடுகளில் புகுந்து அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு விடுகின்றனராம். இச்சம்பவங்கள் இப்போதும் தொடர்ந்து நடக்கின்றன.

இராணுவத் தேடுதலின் போது ஒரு பிரிவினரால் பிடித்துச் செல்லப்பட்டு உயர் இராணுவ அதிகாரிகளின் விசாரணையின் பின் விடுவிக்சப்பட்டு வீடு திரும்பும் வழியில் மீண்டும் வேறு இராணுவப்பிரிவினால் சிலர் கைது செய்யப்பட்டு பூஸா முகாம் சென்றுள்ளனர்.

வடமராட்சியில் ஒப்பரேஷன் லிபரேஷன் தொடங்கிய தினத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட மின்சார விநியோகம் 15 தினங்களின் பின்னர் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது

கொற்றையூர் என்னுமிடத்தில் ஒரே குடும்பததைச் சேர்ந்த பதினொருபேர் கொலையுண்டனர். நவிண்டிலில் இராணுவம் சுட்டுக்கொன்ற இளைஞனின் சடலத்தை அவ்விளைஞனின் தந்தையைக் கொண்டே பதுங்கு குழியில் போட்டுத் தீமூட்டுவித்தனராம்.

அல்வாய் வடக்கில் பாண் வாங்கச் சென்றகார்சாரதியும் அவரது மகனும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். திக்கத்தில் பெற்றோல் குண்டு வீசப்பட்டதால் வீடு எரிந்து இளம் பெண் ஒருவர் மீது தீபரவவே வெளியே நிலததில் உருண்டு தன்மேல் பிடிதத தீயை அணைக்க முயன்ற அவ் இளம் பெண் மீது ஹெலியிலிருந்து போடப்பட்ட மற்றுமொரு பெற்றோல் குண்டு அப்பெண்ணைக் கருக்கியது. இங்கு கடை உரிமையாளர் ஒருவரின் ஒரேயொரு மகனைப் பலி வாங்கிய இராணுவம் கடையையும் சாம்பராக்கியது.

கரணவாய் தெற்கில் வீட்டு வேலியை வெட்டி விழுத்தியது இராணுவம் என்று தெரியாது ஏசிய இளைப்பாறிய ஆசிரியரும் சுட்டுக் கொல்லப்பட்டார். அல்வாயில் வீடொன்றில் இறந்துகிடந்த வயோதிபமாதின் சடலம் பத்துத் தினங்களின் பின்னரே கண்டுபிடிக்கப்பட்டது. இவ் வயோதிபமாதை வீட்டில் விட்டு விட்டு மற்றவர்கள் பாதுகாப்புத் தேடி ஓடிவிட்டனர். திரும்பி வீட்டிற்கு வந்தபோதே வயோதிபமாது சடலமாகக் காணப்பட்டார்.

வலைவெளியில் இராணுவத்தினர் மின்பல்புகள் பொருத்தி மினனொளி பாய்ச்சியுள்ளனர்.

கரணவாய் தெற்கு,மண்டானில் மீண்டும் திடீரென வந்த இராணுவஅணி முகாம் அமைத்துக் குடியேறியுள்ளது. இதனால் பீதியடைந்த மண்டான,கல்லுவம் ஆகியபகுதிகளைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர். இவ் இராணுவ முகாமிலிருந்து இரவு வேளைகளில் பீரங்கி வேட்டு முழக்கங்கள் வடமராட்சிப் பகுதியையே அதிர வைசகின்றன.

வடமராட்சியில் கைது செய்யப்பட்டுப் பூஸா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட இளைஞர்களின் பெற்றோருக்கு அவர்களின் பிள்ளைகளினால் கடிதங்கள் அனுப்பிவைககப்பட்டு வருகின்றன. தேசிய பந்தோபஸ்து அமைச்சரின் பாரியார் திருமதி அத்துலத்முதலியின் முகதாவில் இக்கடிதங்கள் அனுப்பிவைக்சப்பட்டுள்ளன. இளைஞர்கள் தாம் சுகமாக இருப்பதாகக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனவாம்.

தொகுப்பு
ஜே. ஜெயக்குமார்

## குருபூசை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்து இளைஞர் பன்றத்தினர் திருஞானசப்பந்தர் குருபூசை தினத்தை அமைதியாகக் கொண்டாடினர். பன்றத்தலைவர் திரு.கு. ஞானேஸ்வரன் தலைமையில் பிரார்த்தனையும், வழிபாடும் இடம்பெற்றது.

## பரீட்சை முடிவுகள்

(அரியாலை)

மன்னார் தாராபுரம் அல்-மினா மகாவித்தியாலயத்தில் 1986 ஆம் ஆண்டு க. பொ. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் சிறந்த சில பேறுகள் வருமாறு:- செ. அ. அன்சியா 4டீ. 4சீ; மு. சு. தஸ்மியா 4டீ. 4சீ; றா. உவைசிய 4டீ. 3சீ, 1எஸ்; ஹ. ஹஸ்மினா 3டீ. 4சீ. 1எஸ்; மு. ச. மு. சூபி 2டீ, 4சீ, 1எஸ்; அ. க. சமீல் 2டீ, 6சீ;

## அநாதரவான குழந்தை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை, டச் வீதியில் ஒரு வளவினுள் இருந்து அநாதரவான நிலையில் ஒரு குழந்தை இப்பகுதி மக்களால் கண்டுபிடிக்கப்பட்டது. பிறந்த உடனேயே இக்குழந்தை இங்கு வீசப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. எறும்புகள் மொய்த்த நிலையில் காணப்பட்ட இப் பெண்குழந்தையை 10 வருடமாக குழந்தைப் பேறில்லாமல் தவித்த தம்பதியினர் தமது பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளனர்.

# பாகிஸ்தான் ஆயுதங்கள் இரு கப்பலில் வந்துள்ளன

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு பாகிஸ்தான் கப்பல்கள் கடந்த வெள்ளிக்கிழமை நவீன ரகஆயுதங்களை இலங்கை அரசாங்கத்திற்கு சப்ளைபண்ணி விட்டுச் சென்றுள்ளன. இவ்விரண்டு கப்பல்களும் தனியாருக்கு சொந்தமானவையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலகோடி ரூபா பெறுமதிமிக்க குறிப்பிட்ட பெருந்தொகையான ஆயுதங்களையும் ராணுவ உயர் அதிகாரிகள் கொழும்புத் துறைமுகத்திற்கு சென்று பொறுப்பேற்றுள்ளனர். இதன் ஒரு பகுதி வட பகுதிக்கு வெகு விரைவில் அரசால் அனுப்பி வைக்கப்படலாம் என தெரியவந்துள்ளது.

# கொழும்புத்துறை பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இடுகாட்டைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைக் கொழும்புத்துறை இடுகாடு பரிபாலன சபை மேற்கொண்டு வருகின்றது. யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானத்தின் அங்கீகாரத்துடன் இப்பரிபாலன சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இடுகாடு பாதுகாப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக கொழும்புத்துறை கிழக்குப் பகுதி மக்களிடம் திரட்டிய நிதியைக் கொண்டு 350 அடி மதில் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தற்போது கொழும்புத்துறை மேற்குப் பகுதி பொதுமக்களிடம் நிதி சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அடுத்த வாரம் ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம் பகுதி மக்களிடம் நிதி வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சைவ மக்களுக்கான இந்த இடுகாட்டுப் பாதுகாப்பிற்கான மதில் கட்டும் பணிக்குப் பல கிராம மக்களும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாக இடுகாடு பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

### ராணுவ நடவடிக்கைகளினால்

# இடம்பெயர்ந்த பகுதிகளில் திருட்டுகள் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

கடந்த வாரம் கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலால் கதிகலங்கி பாதுகாப்புத்தேடி சேந்தாங்குளம், வசந்தபுரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர் கோஷ்டி ஒன்று வசந்தபுரம் சங்கக் கடையை உடைத்து சீனி, அரிசி மூடைகளை திருடி பூட்டாது விட்டுவிட்டு ஓடிய வீடுகளினுள் பதுக்கி விட்டு பின்பு கொஞ்சம் கொஞ்சமாக கடத்தும்போது பிடிபட்டுக் கொண்டனர்.

திருட்டுக் கோஷ்டியுடன் அவ் வீட்டாரும் மாட்டிக் கொண்டுள்ளனர். இவர்களை இளைஞர் கோஷ்டி ஒன்று விசாரணை செய்துவருகிறது.

இதேபோல இப்பகுதியில் சன நடமாட்டம் இல்லாத வீடுகளில் பல திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றதாக வீடுகளை பார்க்கச்சென்றவர்கள் கவலை தெரிவித்தனர்.

## வெல்லாவெளி தாக்குதலில்

கிழக்கு மாகாணத்தில் உள்ள வெல்லாவெளி பகுதியில் போராளிகளின் முகாமைச் சுற்றி வளைத்த கமாண்டோக்களும், போராளிகளும் மோதியதில் பத்து போராளிகள் மரணமானதாக அறிவிக்கப்படுகிறது.

## ராணுவசூட்டினால் மூவர் காயம்

நேற்று முன்தினம் குரும்பசிட்டி, ஏழாலை பகுதிகளில் ஹெலிகப்டர்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினாலும், அதிகாலை மயிலிட்டி கடல்பகுதியில் பீரங்கிப்படகுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதலினாலும் காயமடைந்த மூவர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலாலியைசேர்ந்த கணபதிப்பிள்ளை சபாரத்தினம் (54), இராசநாயகம் ஜீவானந்தம் (29), ஏழாலை தெற்கைச்சேர்ந்த நடேசன் பரராசசிங்கம் (20) ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

## கைக்குண்டுக்கு மாணவன் பலி

வவுனியா மாவட்டத்திலுள்ள மதுகங்கை என்ற இடத்திலிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்திலுள்ள இடத்தில் அனாதரவான நிலையில் காணப்பட்ட கைக்குண்டு ஒன்றை கையில் எடுத்த சாந்த சமரசிங்க என்ற பாடசாலை மாணவனொருவன் அக்குண்டு வெடித்ததால் ஸ்தலத்திலேயே உடல்சிதறி பலியானான். மற்றும் இரு மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

## வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சிரமதானம்

கடந்த மாதம் பொம்பர் விமானங்களின் குண்டு வீச்சினால் பலத்த சேதமடைந்த யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோவிலின் இடிபாடுகள் துப்புரவு செய்யப்பட்டன.

கோவிற் சுற்றாடலில் வசிக்கும் மெய்யடியார்களும், வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர்களும், யாழ். மாநகரசபை ஊழியர்களும் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

## கோரிக்கை

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறை, தொண்டமானாறு ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளினால் விவசாயத்தைக்கைவிட்ட கெருடாவில் பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென யாழ். அரசாங்க அதிபருக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கெருடாவில் கிராமாபிவிருத்திச் சங்கமும், விவசாய உற்பத்தியாளர் சங்கமும் ஒருங்கிணைந்து நடத்தியகூட்டத்தில் இக்கோரிக்கைக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

## சுன்னாகம் ஸ்கந்தா ஆரம்பம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி தற்போது வழமைபோல் இயங்குவதால் இதுவரை கல்லூரிக்குசமுகம்தராத மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறும் கல்லூரி அதிபர் திரு. பி. நாகரட்ணம் வேண்டியுள்ளார்.

# பொசுப் பொழுது

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று மூதாதையர்கள் வழியாக சொல்லப்பட்டு வருகின்றது.

ஆனால், ராணுவ தர்பார் நடைபெறும் தமிழீழப் பகுதிகளில் நிலைமை எதிர்மாறாக இருக்கிறது.

கோவில் இருக்கும் ஊரில் குடியிருக்க முடியாத அவலம் தோன்றியுள்ளது.

தாக்குதலை ஆரம்பிக்கு முன் ஊரிலுள்ள கோவில்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அங்கே செல்லுமாறு கூறுகிறது ராணுவம். பின்னர் அதனையே தாக்கி பொதுமக்களைக் கொன்று குவிக்கின்றனர். உதாரணம்:- அல்வாய் அம்மன் கோவில்.

இப்போது மாவிட்டபுரத்தில் என்ன நடைபெறுகின்றது?

மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகம் மாற்றிய மாவைக் கந்தன் ஆலயத்தில், ஆட்டுத்தலையை வெட்டி கறி சமைக்கிறார்களாம் சிங்களச் சிப்பாய்கள்.

ஆண்டவன் கூட அகதியாகிக் கப்பல் ஏறிவிட்டான் போல் தெரிகின்றது.

உக்கிரன்

## சர்வதேச அணுசக்தி அமைப்பில் இருந்து தெ. ஆபிரிக்கா இடைநிறுத்தம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகளை அடிக்கடி தென்னாபிரிக்கா மீறி வருவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டையடுத்து அந்நாடு சர்வதேச அணுசக்தி அமைப்பு நாடுகளில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு இது பற்றி முன்னர் எச்சரிக்கப்பட்டும் அது தொடர்ந்தும் இக்கோட்பாடுகளை மீறிவருவதனால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த அமைப்பின் நிர்வாக குழுவின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. பன்னிரண்டு நாடுகள் இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்தன. சில நாடு இக்குழுக் கூட்டத்தின் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

## தாக்குதல்

(இராமேஸ்வரம்)

கடந்த வெள்ளிக்கிழமை இப்பகுதி கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்றவர்களின் நான்கு படகுகளை இலங்கை கடற்படையினர் சேதப்படுத்தி, அவற்றின் வலைகள், மீன்கள் என்பவற்றை கடலில் வீசியதாக மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

## சிரியா இலங்கைக்கு கண்டனம்

(டமஸ்கஸ்)

யாழ்ப்பாணத்தில் அவதியுறும் தமிழர்களுக்கு மனித நேய முறையில் பாரதம் விமானங்கள் மூலம் நிவாரணம் வழங்கியதை சிரியாவின் அரச பத்திரிகை பாராட்டியுள்ளது. இலங்கை இஸ்ரேலின் உதவியுடன் தமிழர்களை மிருகத்தனமாக படுகொலை செய்வதையும் அப்பத்திரிகை கண்டித்துள்ளதுடன், இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணாது இலங்கை அயல் நாடுகளுடன் இச்சம்பவங்களால் பகைக்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளது.

## லோக்தள் கிளை வேண்டுகோள்

## பட்டினிச் சாவிலிருந்து தமிழரைக் காக்க வேண்டும்

(சென்னை)

இலங்கையில் ராணுவ அட்டூழியங்களினால் பாதிப்படைந்து பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருக்கும் தமிழர்களுக்கு மத்திய அரசு உடனடியாக உதவிகளைச் செய்ய வேண்டுமென லோக்தள் தமிழ் நாட்டுப் பிரிவு கேட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிலையான ஒரு தீர்வைக் காண வேண்டும் எனவும், இந்திய மாநில கடற்கரையின் பாதுகாப்பை இந்தியா உறுதி செய்ய வேண்டும் எனவும் சென்னையில் இக்கட்சியினர் தீர்மானம் ஒன்றையும் எடுத்துள்ளனர்.

## இன்றைய பலன்

மேடம்: நன்மதிப்பு, வாக்கு வசிகரம், பணப்புழக்கம், தடைப்பட்ட கருமம் கைகூடும், உயர்பதவி.

இடபம்: தொழில் மந்தம், உள்வீட்டில் பூசல், பெண்களால் சண்டை, தூரத்துச் செய்தியால் நன்மை.

மிதுனம்: புதுத்தொழில் விருத்தி, வாகனச் சிறப்பு, புகழ் ஓங்கும், பெரியோர் நல்லாசி, பூமியால் நன்மை.

கடகம்: பொருள் நட்டம், வீண்பகை, மனவிரக்தி, அந்நிய உதவியால் ஆபத்து, திருடர் தொல்லை.

சிங்கம்: விவாகப்பேறு, அதிக செலவு, கனவுகள் பலிதம், உறவினர் வருகை, இல்லறச் சிறப்பு, விருந்தோம்பல்.

கன்னி: அரசபயம், வாகனாதிகளால் நஷ்டம், பூமி மனையால் பிணக்கு, மூதத சகோதரவழியால் உதவி, மனக்கவலை.

துலாம்: புத்திரரால் நன்மதிப்பு, கல்வியால் உயர்வு, தொழில் வாய்ப்பு, பணப்புழக்கம், தடைகள் நீங்கும்.

விருச்சிகம்: தாய்வழியால் கவலை, வாகனக்கஷ்டம், பிரயாணச்செலவு, வாக்குக்கலகம், உதவியால் உபத்திரவம்.

தனுசு: லாபம் அதிகம், வாகன யோகம், வாக்கு வசீகரம், தனதானிய விருத்தி, கொடுக்கல் வாங்கல் சிறப்பு.

மகரம்: வாக்குவன்மை, செய்தொழில் விருத்தி, பெரியோர் வருகை, பூமியால் நன்மை, தூரத்துச்செய்தி.

கும்பம்: குடும்பப்பிரிவு, உள்வீட்டில் பகை, வீண்பழி, பூமியால் பிணக்கு, திருடர் தொல்லை, ஆயுதபயம்.

மீனம்: கைப்பொருள் நட்டம், கனவான்கள் உதவி தடை, தொழில் கஷ்டம், வீண்செலவு, காதலரிடையே பிணக்கு.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## புதிய கி. சே. அ. பிரிவுகள்

(எழுதுமட்டுவாழ்)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று புதிய கிராம சேவை அலுவலர் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

முகமாலை கிராம சேவை அலுவலர் பிரிவில் உள்ள தம்பகாமத்திலும் கோவில் வயல் கி. சே. அலுவலர் பிரிவில் உள்ள முகாவில்லிலும், புலோப்பளை கி. சே. அ. பிரிவில் உள்ள தர்மக்கேணியிலும் இப் புதிய பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை ஏழு கிராம சேவை அலுவலர் பிரிவுகளைக் கொண்டிருந்த பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு இனி பத்து கி. சே. அ. பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

## அமெரிக்க எம். பி. பாரதத்துக்கு பாராட்டு

(வாஷிங்டன்)

அண்மையில் யாழ்ப்பாண குடாநாட்டில் இந்திய விமானங்கள் உணவுப்பொருட்களை போட்டமை குறித்து அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினரும், ஆசிய பசுபிக் வெளிவிவகார குழுவின் சிரேஷ்ட உறுப்பினருமான திரு. மேர்வின் டிமெல்லி பாராட்டு தெரிவித்துள்ளார்.

பிரதமர் ராஜீவ்காந்தியின் இந்த மனித நேய நடவடிக்கையை அவர் பாராட்டினார்.

## இந்தியாவின்..

—3ஆம் பக்கத் தொடர்ச்சி

சோவியத் தூதரக அதிகாரி, திரு கிறஸ்ஸிக கோஃவ் இந்து சமுத்திரப் பிரதேசம் ஒரு சமாதான வலயமாகத் தொடர்ந்தும் இருத்தல் வேண்டும் என வலியுறுத்தி, அனைத்துலக சமாதானம், அஹிம்சை என்பவற்றை முன்னேற்றும் நற்பணியில் சோவியத் ஒன்றியத்துக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள பிணைப்பு வளர்ந்து வருவதைத் திருப்தியுடன் எடுத்துக்காட்டினார்.

தேசிய ஒருமைப்பாட்டு அரங்கின் தலைவர், திரு. கே. ஜெக வீரபாண்டியன் இத்தறுவாயில் இடம் பெறும் முக்கிய முதன்மைத் தேவைகள் இரண்டு என்றார். அவையாவன, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்டு வரும் அட்டூழியங்களைக் கடுமையாகச் சாடும் வகையில் பொதுசன அபிப்பிராயம் உருவாக்கப்பட்டு, திரட்டப்படுதலும் வேண்டும் என்றார்.

திருவாளர்கள் பி.ஸி கணேசன், என். கே. நாராயணன், அரங்கின் தற்காலிக செயலாளர் திரு. வி. ஆர். சந்திரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். திரு. சந்திரன் முன்மொழிந்த ஒரு தீர்மானம், இலங்கையில் தமிழர் கொலை செய்யப்படுவதற்கு முற்றுப் புள்ளிவைக்கும் பொருட்டு, தேவையாயின், இந்திய மத்திய அரசு இராணுவ ரீதியாகத் தலையிட வேண்டும் எனவும் இவ்வகையில் எடுக்கப்படும் நடவடிக்கை எதற்கும் தமிழ் நாடு எல்லா ஆதரவும் வழங்கும் எனவும் உறுதியளித்தது.

## ஆப்கானிஸ்தானின் ஹெலிகப்டர் சுடப்பட்டது
## 14 பயணிகள் மரணம்

(மாஸ்கோ)

ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் நேற்று முன்தினம் பயணிகள் ஹெலிகப்டர் ஒன்றை ஆப்கான் கிளர்ச்சிக்காரர் சுட்டு வீழ்த்தியதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது நான்குபெண்கள் இரு குழந்தைகள் உட்பட பதினான்கு பேர் இதில் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்பு ஆப்கான் பயணிகள் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு, அதில் இறந்தவர்களின் இறுதிக்கிரியைகள் நடைபெறுவதற்கு காபூலில் மக்கள் கூடியிருந்த போது இது இடம்பெற்றது.

அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் ஏவுகணை மூலமே இவற்றை ஆப்கான் கிளர்ச்சிக்காரர் செய்துள்ளதாக காபூல் அரசு தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானில் யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட்டும் இருதரப்பினரும் மோதல்களை கைவிடவில்லை. அங்கே புதிய தேசிய அரசு அமைப்பதற்கு முன்னாள் மன்னர் திரும்பி வருவதற்கு கம்யூனிஸ்ட் தலைவர்கள் சம்மதித்தும் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## இந்திய நடவடிக்கையை பண்டாரி கண்டிக்கிறார்

அழைப்பு விடுக்காமலேயே இலங்கைக்கு இந்தியா உதவி வழங்கியதன் மூலம் இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையில் கரிபூசியுள்ளது என்று இந்தியன் ஒப்சேவர் பத்திரிகைக்கு பேட்டி அளித்த முன்னாள் இந்திய வெளிவிவகார செயலாளர் ரமேஷ் பண்டாரி தெரிவித்துள்ளார்.

ஆளும் காங்கிரஸ் கட்சியின் அங்கீகாரம் எதனையும் எடுக்காமல் வெளிவிவகார இணை அமைச்சர் நட்வர்சிங்கின் தூண்டுதலின் பேரில் பிரதமர் ராஜீவ்காந்தி இவ்வாறான முடிவைமேற்கொண்டாரெனவும், இது இலங்கையின் தன்னாட்சி, இறைமையை மீறும் ஒரு நடவடிக்கை எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

## ஹெலிகள் அதிகாலை வரை தொடர்ச்சியாக தாக்கின

(அச்சுவேலி)

குரும்பசிட்டி முகாம் தாக்குதலைத் தொடர்ந்து நேற்றிரவு ஹெலிக் கொப்டர்கள் அப்பகுதிகளை நோக்கிக் கடுமையான தாக்குதலை மேற்கொண்டன. பலாலி முகாமில் இருந்தும் கட்டுவன் முகாமில் இருந்தும் சரமாரியான ஷெல் தாக்குதல்கள் காலை ஐந்து மணிவரையும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

குப்பிளான், கட்டுவன், தெல்லிப்பழை, ஏழாலை, புன்னாலைக் கட்டுவன் பகுதிகள் ஷெல் தாக்குதல்களினாலும், ஹெலித் தாக்குதல்களினாலும் அல்லோலகல்லோலப்பட்டன.

வயாவிளான், அச்சுவேலிப் பகுதிகளிலும் ஹெலித்தாக்குதல் அதிகாலை 4 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ஷெல் தாக்குதலால் நால்வர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிடைத்த தகவலின்படி எட்டு வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன குப்பிளான், கட்டுவன், ஏழாலைப்பகுதியிலேயே வீடுகள் சேதமடைந்தன.

மயூரா சென்ரர்

ஆர். ஜி. பில்டிங்

70, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

எம்மிடம் சகலவித ஜவுளி வகைகளும்
ஷேட்டிங், சூட்டிங் என்பனவும் நியாய
விலையில் பெற்றுக்கொள்ளலாம்

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

# கண்டி தலதா பட்டத்துயானை கோபத்தால் அட்டகாசம்

கண்டி தலதா மாளிகையின் பட்டத்து யானையான 'ராஜா' நேற்று முன்தினம் செய்த அட்டகாசத்தினால் கடை ஒன்று முற்றாக சேதமாக்கப்பட்டது பலமக்கள் பயமுறுத்தப்பட்டனர்.

இந்த பட்டத்துயானை மகாவலி கங்கையில் குளித்துக்கொண்டிருக்கையில் அப்பகுதியால் சென்ற இரு இளைஞர்களைக் கண்டதும் கோபமடைந்து அவர்களைத் துரத்தியதாகவும், இளைஞர்கள் தப்பி ஓடவே ஆத்திரமுற்று அட்டகாசத்தில் இறங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மந்திகையிலிருந்து 20 பேர் யாழ். ஆஸ்பத்திரி வந்தனர்

வடமராட்சி தேடுதலின்போது காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மேலும் 20 பேர் நேற்று போக்குவரத்துச்சபை பஸ் வண்டி மூலம் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் நேற்று மந்திகையில் இருந்து யாழ். வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டோரின் விபரம் வருமாறு:

வை. அருளானந்தம் (34) கரவெட்டி, திருமதி கனகாம்பிகை (34) கரவெட்டி, எஸ் இராமச்சந்திரன் (33) அல்வாய் தெற்கு, வி. குலசேகரம் (28) வல்வெட்டித்துறை, என். ஐயம்பிள்ளை (29) வல்வெட்டித்துறை, எல். வேலுப்பிள்ளை (55) மல்லைத்தீவு, வி. தாமினி (65) அல்வாய் தெற்கு, பி. நந்தகுமார் (36) அல்வாய் தெற்கு, கே. நபியா (36) வல்வெட்டித்துறை, வி. சின்னவி (72) உடுப்பிட்டி தெற்கு, ரி. மகேந்திரராசா (29) கப்பர்மலை, சி. மாணிக்கம் (53) அல்வாய் தெற்கு, ரி. தெய்வி (45) குறிஞ்சாத்தீவு, வி. தங்கம்மா (55) வல்வெட்டித்துறை, எல் விஜயசோதி (32) அல்வாய் தெறகு ஏ. இராஜமலர் (32) அல்வாய் தெற்கு, வி. கல்பா (14) பருத்தித்துறை, எல். சுபசந்திரன் (25) அல்வாய் தெற்கு, எஸ். சுரேஸ் (21) அல்வாய்தெற்கு.

# கொல்லப்பட்ட 10 பேரும் போராளிகள் அல்லர்!

(சென்னை)

மட்டக்களப்பு வெல்லாவெளியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் போராளிகள் கொல்லப்படவில்லை எனவும், பத்து தமிழ் இளைஞர்களே கொல்லப்பட்டதாகவும் ஈரோஸ் அறிவித்துள்ளது.

மண்டைதீவுக்கு கப்பல்கள் மூலம் வரும் ஆயுதங்களும், வெடி மருந்துகளும் கோட்டைக்கு கொண்டு செல்லப்படுவதால், யாழ்நகரம் மீது இராணுவம் பாரிய தாக்குதலை நடாத்துவதற்கு முஸ்தீபு நடைபெறுவதாகவும் ஈரோஸ் மேலும் அறிவித்துள்ளது.

## பிரிட்டனில் 58தமிழ் அகதிகள் பிரச்சினை மீள்பரிசீலனை

பிரிட்டனில் கடந்த பெப்ரவரி மாதம் தஞ்சம்புகுந்த 58 தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை பிரிட்டன் அரசு மீள்பரிசீலனை செய்துவருகிறது. பிரிட்டன் இவ் அகதிகளை பெப்ரவரி மாதம் வெளியேற்ற முயன்றபோது நீதிமன்றம் தடைவிதித்து காவலில் வைக்க உத்தரவிட்டிருந்தது இவ்வாறு காவலில் வைக்கப்பட்ட 58 அகதிகளில் ஒருவரைத் தவிர மற்றையோரை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளதாக பி. பி ஸி. அறிவித்துள்ளது.

## காங்கேசனிலும் பொலிஸ் நிலையப்

காங்கேசன்துறையில் புதிய பொலிஸ் நிலையமொன்று திறக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது காபர்வியூ ஹொட்டல் இராணுவ முகாமில் அமைந்துள்ள இப்பொலிஸ் நிலையததில் கடமை புரிவதற்காக புலோலி பொலிஸ் நிலையத்திலிருந்து நான்கு பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளவர் இங்கு கடமையாற்ற மேலும் நான்கு பொலிஸார் யாழ் பொலிஸ் நிலையத்திலிருந்து அழைக்கப்பட்டதாகவும், அவர்கள் இன்று தமது கடமைகளை பொறுப்பேற்பார்கள் எனவும் தெரிய வருகிறது.

### வடமராட்சி...

பீடம் நடவடிக்கை எடுத்துள்ளது. கிளிநொச்சி அரசாங்க அதிபரே இப் புதிய பிரதேசத்தின் அரசாங்க அதிபராகவும் பதவியேற்பார்.

இதற்கிடையே, வடமராட்சிப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளின் ஆசிரியர்களும் உடனடியாக தத்தமது பாடசாலைகளுக்குச் சென்று வரவு இடாப்பில் ஒப்பமிட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு மாணவர்கள் சமுகமளிக்காவிட்டாலும் ஆசிரியர்கள் தினசரி செல்ல வேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளது.

### நட்வர்சிங்கின்......

வந்துள்ளது.

சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதுவரின் அலுவலக அதிகாரிகள். உணவுப் பொதிகளை படகுகளில் ஏற்றும் பணிகளை மேற்பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### 43 படகுகளில்...

பெண்கள் குழந்தைகள் தொகை சுமார் இரண்டாயிரமாக இருக்கலாமென்று தெரிவித்துள்ள அகதிகள் புனர்வாழ்வுத்துறை அதிகாரிகள், மேலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ராமேஸ்வரம்வருவதற்கு படகுச்சேவையின்றிக் காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62 ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 17 • 06 • 87 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

● தாளையடி, ஆழியவளை, வெற்றிலைக்கேணி மீனவர்

# மூன்று வேளைக்கும் தாமரைக் கிழங்கை உண்ணும்பஞ்ச நிலை

வடமராட்சியின் கிழக்குப் பகுதிகளான மருதங்கேணி, தாளையாடி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் வசிக்கும் நூற்றுக்கணக்கான ஏழை மீனவக் குடும்பங்கள் பெரும் பட்டினியில் வாடுவதாக தெரிவிக்கப்படுகிறது

தமது பசியினைப் போக்குவதற்காக குளங்களில் காணப்படும் தாமரைக் கிழங்குகளை மூன்று நேரமும் அவித்து உண்ணும் பரிதாப நிலையினில் இவர்கள் உள்ளார்கள்.

கடந்த சில மாதங்களாக இப்பகுதி மீனவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் மீனவ நிவாரண உணவு முத்திரைகள் வழங்கப்படாத காரணத்தினாலும், கடலில் மீன்பிடிக்க செல்ல முடியாமையினாலுமே இப் பரிதாப நிலையில் இவர்கள் உள்ளனர்.

தமது குடும்பத்தினரின் பசியினைப் பொறுக்க முடியாது கடலில் மீன் பிடிக்கச் சென்ற நேசன் என்பவர் அப் பகுதியில் நிலைகொண்டிருந்த கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானதுடன் அவரின் படகில் இணைத்திருந்த எஞ்ஜினையும் கழற்றி கடலில் வீசிவிட்டு இனிமேல் கடற்பக்கம் வரக்கூடாதென எச்சரித்து அனுப்பினராம். இதேவேளை இப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இன்னமொரு படகை காணவில்லையென அஞ்சப்படுகிறது.

மா, பாண் ஆகியவைகளின்

# கொள்ளை லாப விற்பனைக்கு உணவு அதிகாரி எச்சரிக்கை!

யாழ். மாவட்டத்தில் அதிக விலையில் மா, பாண் என்பவற்றை விற்பனை செய்தால் கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ் உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. சி. பற்குணம் எச்சரித்துள்ளார்.

சில பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு கிலோ மாவினை எட்டு ரூபா ஐம்பது சதத்திற்கும், பேக்கரிகள் சில ஒரு றாத்தல் பாணை மூன்று ரூபா ஐம்பது சதமளவிலும் விற்பனை செய்வதாக செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்தே இந்த எச்சரிக்கை. விடுக்கப்பட்டுள்ளது.

எக் காரணம் கொண்டும் மா, பாண் போன்றவை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படக்கூடாது எனவும், எவராவது கூடுதல் விலைக்கு இவற்றை விற்பனை செய்தால் அது பற்றி அப் பகுதி உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரும் படியும் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி அறிவித்துள்ளார்.

குறிப்பிடப்பட்ட விலையை விட அதிக விலையில் இவற்றை விற்பனை செய்யும் வியாபாரிகளின் அனுமதிப்பத்திரங்கள் ரத்துச் செய்யப்படுவதுடன் மேல் நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# இந்த மாத ஓய்வூதியத்தை வழங்கமுடியாத நெருக்கடி

போதியளவு நிதிவசதி இல்லாததினால் யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெற்றுவருபவர்களுக்குரிய ஜூன் மாத ஓய்வூதியத்தை வழங்க முடியாத நிலை செயலக அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது

தற்போது யாழ். மாவட்டத்தில் 16 500 பேர் ஓய்வூதியம் பெற்று வருகின்றார்கள். இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மாதாந்தம் இருநூறு லட்சம் ரூபாய் தேவைபபடுகின்றது. கடந்த சில வாரங்களாக ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக யாழ் செயலகத்திற்கான வருமானம் பாதிக்கப்பட்டதினால் வங்கியில் செயலகக் கணக்கில் மிகக் குறைந்தளவுபணமே உள்ளது. இந்தப்பணம் ஓய்வூதியத்தை வழங்குவதற்கு போதாதிருப்பதினாலேயே ஜூன் மாத ஓய்வூதியத்தை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அத்துடன் வழமையாக ஓய்வூதியம் வழங்கப்படும்திகதிக்கு இரு வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்படும் ஓய்வூதிய பற்றுச்சீட்டுக்கள் மிக காலதாமதமாக இம்மாதம் 13ஆம் திகதியே இங்கு வந்து சேர்ந்தமையும், ஊரடங்கு அமுலாக்கல் காரணமாக செயலகவேலைகள் பாதிக்கப்பட்டமையும் ஓய்வூதிய வழங்கல் நடவடிக்கைகளை மேலும் தாமதிக்கச் செய்துள்ளன.

## பத்திரங்களை விற்கமுடியாது

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் தற்போது உதவி அரசாங்க அதிபர்களின் அனுமதியுடன் கிராம சேவை அலுவலர்களால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இப்படிவங்கள் சிலரால் விலைக்கு விற்கப்படுவது தொடர்பாக தமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இவற்றைப் பணங்கொடுத்து வாங்க வேண்டாமெனவும் யாழ் மாவட்ட சமூக சேவை உதவி அத்தியட்சகர் திருமதி சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பாகிஸ்தானிட..

நிலைமை குறித்து அவர் பாகிஸ்தான் பிரதமருக்கு விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் அத்துலத் முதலி பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா உல் ஹக்கையும் இதற்கு முன்னர் சந்தித்துப் பேசியது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் ஏற்கனவே பத்துலட்சம் ரூபா பெறுமதியான ராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்கியது தெரிந்ததே.

### கொழும்புத்துறை ..

பென்ரன், காப்புக்கள், ரொக்கப்பணம் பத்தாயிரம் ரூபா, வீட்டுத்தளபாடங்கள் உட்பட 75,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. வீட்டினுள் நுழைந்த நான்கு கொள்ளையர்கள் வீட்டில் தனியாக இருந்த இரு பெண்பிள்ளைகளின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியே இத் துணிகரக் கொள்ளையை நடத்தி விட்டு ஓடி மறைந்து விட்டனராம்.

## 1000 இளைஞர் இன்று விடுதலை

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் ஆயிரம் தமிழ் இளைஞர்கள் கடற்படைக் கப்பலொன்றின் மூலம் நேற்று மாலை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## சென்னையில் கைது

சென்னையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பதின்மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்களை சென்னைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### இரண்டு..

தில் இடம்பெற்ற மற்றொரு கண்ணிவெடிச் சம்பவத்தில் பொதுமக்களில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

### எம்மை எவரும்..-

பாதுகாப்பு என்பன உரியவாறு பேணப்படும் எனவும் கூறினர். அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென மீண்டும் கேட்டுக்கொண்ட பிரதமர் காந்தி இலங்கை ராணுவம் அப்பாவிப் பொதுமக்களைத் தாக்கிவருவது தனக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறினர். இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முயற்சிகளுக்கு இது நல்லதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டினர். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்திக் கூறினர்.